**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்.**

**முன்னிலை: திரு. கே. ராஜேஷ்கண்ணன், பி.ஏ., பி.எல்.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, கடலூர்.**

2017-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**வழக்கிடை விண்ணப்பம் எண்.449/2017 ன்**

**முதலேற்பு வழக்கு எண்.320/2013**

ஜெயா (எ) ஜெயசெல்வம் .. மனுதாரர்/ வாதி

/எதிர்/

1. ஜெயலட்சுமி
2 .ஸ்ரீபால் ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இந்த மனுவானது 13.09.2017 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியான விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே. சிவராஜ் அவர்களும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர். குருராஜ் அவர்களும் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, இதுநாள்வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

<u>உத்தரவு</u>

இம்மனுவானது, உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 ன்கீழ் வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவுடன் தாக்கல் செய்துள்ள பிரமாணப்பத்திரத்தின் சுருக்கம்:-.**

மேற்படி வழக்கில் வாதி, மனுவில் மனுதாரர். மனுதாரர்/வாதி தரப்பில் நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் எதிருரை தாக்கல் செய்து கட்சியாடி வருகிறார். தாவா சொத்தானது மனுதாரரின் சுவாதீனத்தில்தான் உள்ளது. இந்தச் சூழ்நிலையில், 2 ம் எதிர்மனுதாரர், மனுதாரரின் உரிமை மூலத்தை மறுத்து வருகிறார். 1 ம் எதிர்மனுதாரர் மறுக்கவில்லை. ஆகவே மேற்படி வழக்கில் நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ள சூழ்நிலையில், 2 ம் எதிர்மனுதாரர் உரிமை மூலத்தை மறுத்து

WEB COPY

வருவதால் விளம்புகை பரிகாரம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. ஆகவே வழக்குரையை திருத்தம் செய்ய வே்ண்டியது அவசியமாக உள்ளது. தாவா சொத்தில் மனுதாரர் சுவாதீனத்தில் உள்ளார் என்றும், ஆகவே வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டுமென்றும் மனுதாரர்/வாதி தரப்பில் வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 2 ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்-**

இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது சட்டப்படியும், பொருண்மைகளின்படியும் ஏற்புடையதல்ல. இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும். நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரப்பட்டதற்கு வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டுமென்றும் கோரி மனுதாரர் மனு தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதல்ல. 30 ஆண்டுகள் பழமையான கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் உரிமை கோரப்பட்டுள்ளது. அந்த கிரைய ஒப்பந்தமும் நடைமுறைக்கு வரவில்லை. ஒப்பந்தத்தில் தெளிவான விளக்கங்கள் குறிப்பிடப்படவில்லை. சுவாதீனம் சம்பந்தமாக ஒப்பந்தங்கள் ஏற்பட்டிருந்தால் கண்டிப்பாக பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். பதிவு செய்யப்படாத ஒப்பந்தம் ஏற்புடையதல்ல. இந்நிலையில் சுவாதீனத்தை மெய்ப்பிப்பதற்காக மனுதாரர் தாக்கல் செய்த நீதிமன்ற ஆணையர் நியமன மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் சாட்சியங்கள் முடிக்கப்பட்டுள்ள நிலையில், எதிர்மனுதாரருக்கு இடையூறு கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தாலும், சட்டத்தின் வழிமுறைகளை தவறாக பயன்படுத்தி தமிழ்நாடு நீதிமன்ற சட்டம் பிரிவு 25(பி)ன் கீழ் சொத்து விவரத்தை மாற்றி உள்ளதாகவும், ஆகவே இம்மனு ஏற்புடையதல்ல. வழக்கு தாக்கல் செய்து 4 ஆண்டுகள் ஆகும் நிலையில், தற்பொழுது இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது சட்டப்படி ஏற்புடையதல்ல. ஆகவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியிடப்படவில்லை.

5. இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினையாதெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதுதானா? என்பதேயாகும்.

**6. பிரச்சனைக்கு தீர்வு-**

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், இம்மனு

WEB COPY

அனுமதிக்கத்தக்கதுதானா? என்று பரிசீலிக்கும்பொழுது, மனுதாரர்/வாதி தரப்பில் நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிர்மனுதாரர் எதிருரை தாக்கல் செய்து கட்சியாடி வருகிறார் என்றும், தாவா சொத்து மனுதாரர் சுவாதீனத்தில் உள்ளதாகவும், இந்தச் சூழ்நிலையில், 2 ம் எதிர்மனுதாரர் மனுதாரரின் உரிமை மூலத்தை மறுத்து வருகிறார் என்றும், 1 ம் எதிர்மனுதாரர் மறுக்கவில்லை என்றும், ஆகவே நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளதாகவும், இந்தச் சூழ்நிலையில், 2 ம் எதிர்மனுதாரர் உரிமை மூலத்தை மறுத்து வருவதால் விளம்புகை பரிகாரம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், ஆகவே வழக்குரையை திருத்தம் செய்ய மனு தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா சொத்தில் மனுதாரர் சுவாதீனத்தில் உள்ளதாகவும், ஆகவே வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டுமென்று மனுதாரர் வாதி தரப்பில் வாதிடப்பட்டது.

7. அதற்கு மாறாக எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது சட்டப்படியும், பொருண்மைகளின்படியும் ஏற்புடையதல்ல என்றும், நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரப்பட்டதற்கு வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டுமென்றும் கோரியுள்ளது ஏற்புடையதல்ல என்றும், 30 ஆண்டுகள் பழமையான கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் உரிமை கோரப்பட்டுள்ளது என்றும், அந்த கிரைய ஒப்பந்தம் நடைமுறைக்கு வரவில்லை என்றும், ஒப்பந்தத்தில் தெளிவான விளக்கங்கள் குறிப்பிடப்படவில்லை என்றும், சுவாதீனம் சம்பந்தமாக ஒப்பந்தங்கள் ஏற்படவில்லை என்றும், இந்நிலையில் சுவாதீனத்தை மெய்ப்பிப்பதற்காக நீதிமன்ற ஆணையர் நியமன மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரரிடமிருந்து சொத்தை அபகரிப்பதற்காக 2 ம் எதிர்மனுதாரரை தரப்பினராக சேர்த்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் சாட்சியங்கள் முடிக்கப்பட்டுள்ள நிலையில், எதிர்மனுதாரருக்கு இடையூறு கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்திலும், சட்டத்தின் வழிமுறைகளை தவறாக பயன்படுத்தி தமிழ்நாடு நீதிமன்ற சட்டம் பிரிவு 25(பி)ன் கீழ் சொத்து விவரத்தை மாற்றி உள்ளதாகவும், ஆகவே இம்மனு ஏற்புடையதல்ல என்றும், வழக்கு தாக்கல் செய்து 4 ஆண்டுகள் ஆகும் நிலையில், தற்பொழுது இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், ஆகவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் வாதிடப்பட்டது.

WEB COPY

8. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யவில்லை. இவ்வழக்கு மனுதாரர்/வாதியால் நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் பி.சா.1 விசாரிக்கப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மனுதாரர்/வாதி தரப்பில் வா.சா.1 முதல் 4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, மனுதாரர்/வாதி தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேற்படி வழக்கு முடியும் தருவாயில் உள்ளது. இந்தச் சூழ்நிலையில் மனுதாரர்/வாதியால் தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட வேண்டுமென்று மனு தாக்கல் செய்யப்பட்டு, வ.வி.எண்.369/2017 என்று கோப்பில் எடுக்கப்பட்டு, அந்த மனுவானது 20.07.2017 தேதி அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரும் வழக்கில் நீதிமன்ற ஆணையர் என்பது ஏற்புடையதல்ல என்ற காரணத்தினாலும், சுவாதீனம் சம்பந்தமாக நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி தாக்கல் செய்துள்ள அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால் மனுதாரர்/வாதியின் கட்சிப்படி கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் தாவா சொத்தில் சுவாதீனத்தில் உள்ளதாகவும், ஆகவே தாவா சொத்தில் மனுதாரர்/வாதிக்கு சுவாதீனம் ஏற்பட்டுள்ளது என்று வாதிட்டுள்ள நிலையில், தற்சமயம் வாதி தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்ட நிலையில் வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டுமென்று மனு தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதுதானா? என்று பரிசீலிக்க வேண்டியுள்ளது. இவ்வழக்கு கடந்த 02.12.2013ம் தேதி அன்று 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பின்னிட்டு மனுதாரர்/வாதியால் வ.வி.எண்.182/2014 தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் 2ம் எதிர்மனுதாரரை சேர்ப்பதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டுமென்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில், 2 மனுக்களும் உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 1 விதி 10ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு, அவைகள் முறையே 180, 181, 182 என்று கோப்பில் எடுக்கப்பட்டு, அந்த மனுக்களில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, பின்னிட்டு 2ம் எதிர்மனுதாரர் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார். 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் 07.12.2016ம் தேதியன்று வழக்கு எதிருரை தாக்கல் செய்யப்பட்டு 9.07.2013ம் தேதிய ஆவணம் செல்லத்தக்கதல்ல என கூறப்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் கிரைய ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று பரிகாரம்

WEB COPY

கோரியுள்ள நிலையில் ஏன் எழுவினா வனையப்படுவதற்கு முன்பே தாவா சொத்தின் மதிப்பீடு சம்பந்தமாக 25(பி) ன் கீழ் மதிப்பீடு செய்யவில்லை. இந்த வழக்கைப் பொறுத்தவரை பல மனுக்கள் மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ளார். ஆனால் இறுதியாக, 2 ம் எதிர்மனதாரரின் கிரைய ஆவணம் சம்பந்தமாக விளம்புகை கேட்டுவிட்டு தற்சமயம் தாவா சொத்தின் மதிப்பீடு சம்பந்தமாக வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டுமென்று கோரியுள்ளது ஏற்புடையதல்ல. மேற்படி வழக்கு முடியும் தருவாயில் உள்ளது. வாதி தரப்பில் வா.சா.1 முதல் 4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.1 விசாரிக்கப்பட்டு, பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.13 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இந்தச் சூழ்நிலையில் வழக்கின் தன்மையை மாற்றும்விதமாகவும், வழக்கு முடியும் தருவாயில் வழக்குரையில் திருத்தம் செய்ய வேண்டுமென்று கோரியுள்ளது ஏற்புடையதல்ல. வழக்கின் தன்மையே அதன் குணாதிசயங்களை மாற்றும் செயலாக உள்ளதால் வழக்கு முடியும் தருவாயில் வழக்குரையை திருத்தம் செய்ய இயலாது. வாதி வழக்குரையில் உள்ள குறைகளை பூர்த்தி செய்வதற்காக மனுதாக்கல் செய்துள்ளார். இந்த மனுவானது காலதாமதம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதல்ல என்று தீர்மானிக்கப்படுகிறது.

WEB COPY

இறுதியாக, இம்மனு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்தரிடம் சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எழுதி, தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2017-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**கடலூர்**

**இருதரப்பிலும் சாட்சிகள், சான்றாவணங்கள்-** இல்லை

**கூ.மா.உ.நீ.**
**கடலூர்**

வரைவு/சீரான உத்தரவு
வ.வி.எண்.449/2017 ன்
மு.வ.எண்.320/2013
நாள்: 15.9.2017

WEB COPY